5th November 1958]

Sri N. MARUDACHALAM : உருளைக்கிழங்கு உற்பத்தி செய்வது நீலகிரியில் மட்டுந்தானா ? வேறுயிடங்களிலும் உற்பத்தி செய்யப்படுகிறதா ?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : நமது ராஜ்யத்தில் மொத்தம் 30,000 ஏக்கரில் உருளைக்கிழங்கு உற்பத்தியாகிறது. அதில் 29,300 நீலகிரியில். கொடைக்கானல், ஏற்காடு, ஹோசூர் போன்ற இடங்களிலும் உருளைக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

Children's Theatres

* **874Q.—Sri M. C. MUTHUKUMARASWAMY :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) சிறு பிள்ளைகளுக்கென படக் காட்சி சாலைகள் (**Children's Theatres**) எத்தனை ஜில்லாக்களில் அரசாங்கம் தொடங்க உத்தேசித்துள்ளது ?

(ஆ) அவைகள் எங்கெங்கே ?

(இ) அதற்கென ஒதுக்கியுள்ள உத்தேசத் தொகை எவ்வளவு ?

The Hon. Sri C. SUBRAMANIAM : (அ), (ஆ) சிறு பிள்ளைகளுக்கான படக் காட்சி சாலை (**Children's Theatres**) சென்னையில் மட்டும்தான் உள்ளது. வேறு ஜில்லாக்களில் எங்கும் தொடங்க அரசாங்கத்திற்கு உத்தேசமில்லை.

(இ) படக் காட்சி சாலைக்கு ஆரம்பத்திலிருந்து 1959 மார்ச்சு மாதம் 31-ந் நாள் வரை சுமார் ரூ. 1,53,060 செலவாகும் என மதிப்பிடப்பட்டிருக்கிறது. அதன் பிறகு வருடாவருடம் சுமார் ரூ. 18,000 செலவாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

Sri M. C. MUTHUKUMARASWAMY : வேறு ஜில்லாக்களில் இந்த படக் கதிரை ஆரம்பிக்க முடியவில்லை என்றாலும் சென்னையில் நடக்கிற இந்த சிறுவர்களுக்கான கதிரை ஜில்லா தலை நகரங்களிலாவது குறிப்பிட்ட காலங்களில் கொண்டு போய் அங்கு நடத்த அரசாங்கம் முன் வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இப்பொழுதுதான் இங்கு ஆரம்பித்திருக்கிறோம். இந்த அனுபவத்தைக் கொண்டு, இதில் வெற்றி ஏற்படுமானால் ஜில்லாக்களில் இம்மாதிரியான படங்களை காண்பிக்க ஏற்பாடு செய்யலாம்.

Sri K. ANBAZHAGAN : சிறுவர்களுக்கான திரைப்பட அரங்கில், சென்னை நகரில் உள்ள ஆரம்பப் பள்ளிக்கூட குழந்தைகளுக்கு மாலைக்காட்சி, மாட்டினிஷோ மூலம், ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட இரண்டு மூன்று பள்ளி மாணவர்களுக்கு காண்பித்து அதன் மூலம் அவர்களின் அறிவை வளர்க்க அரசாங்கம் திட்டமிடுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதே மாதிரித் தான் இப்பொழுது திட்டமிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு சனிக்கிழமையும், ஞாயிற்றுக்கிழமையும் பள்ளிக்கூட குழந்தைகளுக்கு ஒவ்வொரு பகுதியில் உள்ள பள்ளிக்கூட குழந்தைகளை அழைத்து இந்தக் காட்சிகளை காண்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Sri K. B. S. MANI : சென்னையில் காண்பிக்கப்படுகின்ற இந்த படங்களை அதிகமாக காப்பி எடுத்து மற்ற தாலுக்காக்களில் இருக்கும் தியேட்டர்களுக்கு கொடுத்து அந்தந்த இடங்களில் இருக்கிற குழந்தைகளுக்கு காண்பிப்பதற்கு அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா ? 9–30 a.m.

The Hon. Sri C. SUBRAMANIAM : இங்கு ஏற்படும் அனுபவத்தைக்கொண்டு மற்ற இடங்களுக்கும் இந்த திட்டத்தை விஸ்தரிக்கப்படுவதைப்பற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யும்.

[5th November 1958

SRI D. S. AUTHIMOOLAM: ஸார், இவ்விதம் குழந்தைகளுக்கு பிலிம் காண்பிப்பதினால் அவர்களுக்கு கிடைக்கிற லாபம் என்ன? இதனால் என்ன பெனிபிட் கிடைக்கிறது? அல்லது பழைய அசெம்பிளி கட்டிடத்தை எப்படியாவது உபயோகப்படுத்தவேண்டும் என்கின்ற காரணத்திற்காகத்தான் இது ஆரம்பிக்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM: இதில் என்னுடைய அபிப்பிராயத்தை கனம் அங்கத்தினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். என்னுடைய அபிப்பிராயத்தில் நல்ல படங்களை குழந்தைகளுக்கு காண்பித்தால் அவர்களுக்கு நல்ல அறிவும் பண்பும் வளரும். கெட்ட படங்களை காண்பித்தால் குழந்தைகளுக்கு கெட்ட அறிவும் பண்பும் தான் வளர முடியும்.

SRI V. SANKARAN: ஸார், சிறு பிள்ளைகளுக்கு எது போன்ற திரைப்படங்கள் காண்பிக்கப்படுகின்றன?

THE HON. SRI C. SUBRAMANIAM: குழந்தைகளுக்கு என்று தனியாக எடுக்கப்படுகின்ற படங்கள் காண்பிக்கப்படுகின்றன.

SRI R. KRISHNASAMI NAIDU: தலைவர் அவர்களே, ஜில்லா தாலுகா தலைநகரங்களில் இந்த மாதிரியான தியேட்டர்கள் கட்டுவதற்கு பொதுமக்கள் முன்வந்தால் அரசாங்கம் மான்யம் கொடுப்பதற்கு தயாராக இருக்குமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது அந்த திட்டம் நம்மிடத்தில் இல்லை. அதிலும் பொதுமக்களாகவே தியேட்டர்கள் கட்டுவதாக இருந்தால் அதை அரசாங்கம் வரவேற்கும்.

SRI N. R. THIAGARAJAN: இப்போது புதிது புதிதாக "தகப்பன் மகளுக்கு கட்டிய தாலி" "பாட்டன் பேத்திக்கு கட்டிய தாலி" என்றெல்லாம் படங்கள் வெளி வந்துகொண்டிருக்கின்றன. இந்த படங்கள் எல்லாம் இந்த தியேட்டர்களில் காட்டப்படுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM: இந்த படங்களையெல்லாம் குழந்தைகள் பார்க்காமல் இருக்கவேண்டும் என்பதற்காகத்தான் இம்மாதிரிப்பட்ட குழந்தைகளுக்கு என்று எடுக்கப்பட்ட படங்களை காண்பிப்பதற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

MR. SPEAKER: 875-ம் கேள்வியையும் 876-ம் கேள்வியையும் ஒன்றாக எடுத்துக்கொள்ளலாம்.

Food poisoning

* 875 *Q.*—SRI N. K. PALANISAMI, SRI. M. P. SARATHI, SRI S. LAZAR, SRI S. PAKKIRISAMI PILLAI, SRI S. M. ANNAMALAI, SRI A. VEDARATHNAM AND SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the number of food poisoning cases in this State, districtwise;

(b) the number of deaths due to food poisoning in this State, districtwise;

(*c*) whether the Government have investigated the cause of food poisoning in the State; and

(*d*) the steps taken by the Government to prevent further food poisoning in the State?